Registered as a Newspaper

A/L 88
Paper Classes
(Sat. / Sun.)
9.30 — BOTANY
10.30 — ZOOLOGY
11.30 — CHEMISTRY
12.30 — PHYSICS
(எமது வழமையான ஆசிரியர் குழு)
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1-50

A/L 88,89
Weekend Classes
நடைபெறுகின்றன
New Master
Institute
241, Navalar Road,
JAFFNA.
B.M. CLANE, JAFFNA

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஸ்ரீ மாசி மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 14 (04 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 19

# இந்தியா - புலிகள் பேச்சு

## சென்னையில் நடக்க வலியுறுத்து

## ஜெனரல் பாண்டேயிடம் சிவஞானம் எடுத்துரைப்பு

— உதயன் அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், மார்ச் 4

இந்திய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். அந்தப் பேச்சுவார்த்தை சென்னையிலேயே நடைபெற வேண்டும். இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பேச்சுவார்த்தை நடைபெறுவது எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும்.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி வி கே. சிவஞானம், இந்திய அமைதிப் படையின் தலைமைப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சர்வேஸ் பாண்டேயிடம் வலியுறுத்தினார்.

இந்தத் தகவலைத் திரு சிவஞானம் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார் யாழ்ப்பாண நகரக் கொமாண்டர் அலுவலகத்தில் திரு. சிவஞானமும் மேஜர் ஜெனரல் சர்வேஸ் பாண்டேயும் கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் இரண்டு மணி நேரமாகச் சந்தித்துப் பேசினர்,

இந்தச் சந்திப்பின் பின்னரே திரு சிவஞானம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுத்த வரையில் அவர்களின் பேச்சுவார்த்தை விவரம் எல்லாம் சென்ற மாதம் நடுப்பகுதியில் அவர்களின் சென்னை தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன-

இது சம்பந்தமாக அறிவித்தல் ஒன்றும் விடுக்கப்பட்டது-

இந்த அறிவிப்புக்கு முந்திய நிகழ்வுகளைக் கருத்தில் எடுக்காமல் உடனடியாக இந்திய தரப்பினர் சென்னையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்-

இவ்வாறு திரு. பாண்டேயிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் திரு. சிவஞானம் தெரிவித்தார். [இ-10]

## 23 இளைஞர் கைது!

கொழும்பு, மார்ச் 4

காலி மாவட்டத்தில் யக்கலமுல்ல என்னும் இடத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாக நடத்திய தேடுதலில் 23 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்

இவர்களிடமிருந்ததாகக் கூறப்படும் 23 உள்ளூர்த் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

## பதினைந்து சிங்களவர் முதலிக்குளத்தில் சுட்டுக் கொலை!

கொழும்பு, மார்ச் 4

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவச் சீருடையில் சென்ற கோஷ்டி ஒன்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பதினைந்து சிங்கள மக்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன் இரவு திருமலையில் இருந்து பதின்மூன்று மைல் தொலைவில் உள்ள முதலிக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்கள் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது

படுகாயம் அடைந்த மூன்று பேர், விமான மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் தப்பிய இருபதுக்கும் மேற்பட்ட கிராமவாசிகள் அருகில் உள்ள இலங்கை விமானப் படை முகாமில் தஞ்சமடைந்தனர்.

இலங்கை விமானப் படை அதிகாரிகள் சம்பவம் நடந்த இடத்துக்கு விஜயம் செய்தபோது உயிரிழந்த 15 பேரின் சடலங்களைக் காணக் கூடியதாக இருந்தது

பிந்திய தகவல் ஒன்றின்படி சுட்டுக் கொல்லப்பட்ட 15 பேரில் தமிழர் ஒருவரும் அடங்குகிறார் எனத் தெரிய வந்தது. (இ-எ)

## தொலைபேசி: யாழ்—கொழும்புக்கு 24 நேரடித் தொடர்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட யாழ்-கொழும்பு நேரடித் தொலைபேசி மறுசீரமைப்புத் தொடர்பாக முன்னேற்றகரமான சில மாற்றங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இதன்படி முன்னர் 10 நேரடித் தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இப்பொழுது இது 24 நேரடித் தொடர்புகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது வெகு விரைவில் 60 ஆக உயர்த்தப்படும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி யாழ்ப்பாணம், சுண்டுக்குளி தபால் நிலையங்களில் பொதுமக்கள் பாவனைக்காக முறையே இரண்டு இரண்டு தொடர்புகளும் யாழ் செயலக பாவனைக்கு நான்கு தொடர்புகளும், மற்றும் கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்-வைத்தியசாலை, மின்சார சபை, பொலிஸ் அத்தியட்சகர் போன்ற அத்தியாவசிய சேவையாளர்களுக்கு ஏனைய தொடர்புகளும் வழங்கப்பட உள்ளன.

இத்தொடர்பின் ஊடாக கொழும்பில் உள்ள எந்தத் தொலைபேசி எண்ணுடனும் தொடர்புகொள்ள முடியும்.

ஆனால் அவ்வகையான தொடர்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமாயின் அநுராதபுரம் ஊடாகத் தன்னியக்க இலக்கமாகிய —025— என்ற எண்ணைச் சுழற்றியபின் கொழும்பில் உள்ளவரின் தொலைபேசி எண்ணைச் சுழற்றுவதன் மூலமாக தொடர்பைப் பெற்றுக் கொள்ளலாம் என அறியப்படுகிறது. (இ-9)

## நெதர்லாந்திலுள்ள தமிழருக்கு அரசியல் தஞ்சம் வழங்க மறுக்கும் உரிமை அரசுக்கு உண்டு

ஹேக், மார்ச் 4

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்க மறுக்கும் உரிமை அரசுக்கு உண்டு.

இப்படி நெதர்லாந்து நாட்டின் அரசியலமைப்புச் சபை தீர்ப்பளித்திருக்கின்றது

எட்டு இலங்கைத் தமிழர்களின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை நிராகரித்து டச்சு நீதிமன்றம் ஒன்று கடந்த நவம்பரில் தீர்ப்பளித்தது.

இதனை எதிர்த்து எட்டுத் தமிழர்கள் மேன்முறையீடு செய்தனர். அதனை விசாரணை செய்த பின்னரே அரசியலமைப்பு சபை மேற்கண்ட தீர்ப்பை வழங்கியது.

நெதர்லாந்து அரசாங்கம் அரசியல் தஞ்சம் வழங்கக் கூடிய அளவுக்கு தமிழர்கள் இலங்கையில் பயமுறுத்தலுக்கு ஆளாகவில்லை என்று அத்தீர்ப்பில் கூறப்பட்டிருக்கின்றது (ஒ-எ)

## புதிய யோசனை ஒன்று சொல்கிறார் கருணாநிதி

சென்னை, மார்ச் 3

தமிழர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்குப் புதிய ஆலோசனை ஒன்றைத் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் திரு கருணாநிதி தமது புதிய யோசனையை வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கையளிப்பும் இந்திய அமைதிப்படையினரின் யுத்த நிறுத்த பிரகடனமும் ஒரே சமயத்தில் நடைமுறைக்கு வர வேண்டும்.

இந்த அடிப்படையில் தான் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும் — என்பதே திரு. கருணாநிதி தெரிவித்த புதிய ஆலோசனையாகும்.

### மாற்றுவழி என்ன?

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு ரகசியப் பேச்சு நடத்துவதாக வெளியான செய்தி குறித்து அவர் கருத்து வெளியிடுகையில்-

"எனக்கு இதுவரை அப்படியான எந்தவொரு தகவலும் கிட்டவில்லை

ஆனால் புலிகளுடன், இந்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த மறுக்குமேயானால் மாற்றுவழி என்ன?

அவர்கள் இலங்கை அரசுடன் தான் பேச வேண்டி வரும். இது இந்திய அரசின் தவறாகத்தான் இருக்க முடியும்" எனக் கூறினார். (அ-ஒ)

* வழமையான சுவையான அம்சங்களுடன்-
* பல புதிய அம்சங்களையும் சேர்த்து எடுத்து-
* புது மெருகுடன் மனம் கவரும் விதத்தில்-
* மணம் கமழும் வார இதழாக
மீண்டும்
நாளைய தினம்
சனிக்கிழமை
வெளிவருகிறது
சஞ்சீவி
பக்கங்கள் - பத்து
விலை: ரூபா 2. 50
இன்றே உதயனின் வார இதழ்
சஞ்சீவிக்கு
ஆர்டர் செய்யுங்கள்

### சுப நேரம்

04- 03- 1988
மாசி 21
வெள்ளிக்கிழமை
சுபநேரம்: 6 26 முதல் 7 56 வரை
ராகுகாலம்: 10 56 முதல் 12-26 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

8 சிப்பாய்கள் கொலைச் சம்பவம்:

## தீவிரவாதிகள் இயக்கத்துக்கு தொடர்பு?

கொழும்பு, மார்ச் 4

அத்துருகிரிய இராணுவ முகாமில் எட்டுச் சிப்பாய்களைச் சக சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொன்ற சம்பவம் தென்னிலங்கைத் தீவிரவாத இயக்கம் ஒன்றுடன் தொடர்பானது என்று பொலிஸார் திடமாக நம்புகின்றனர்.

இப்படிக் கொழும்புப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயுதங்களை அபகரிக்கும் திட்டம் ஒன்றே இச்சம்பவம் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அத்துருகிரிய ராணுவ முகாமுக்கு சம்பவம் நடந்த பின்னர் ராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நளின் செனவிரத்தின சென்றார்.

செய்தியாளர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கருத்துக் கேட்டனர்

"பேச்சு மூச்சற்று நிற்கின்றேன். பிரச்சினையின் அத்திவாரம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்." -இப்படி அவர் சொன்னார்.

இதனிடையில் வெறித்தனம் புரிந்த சிப்பாயின் சொந்த ஊரான காலிக்கு நேற்று பொலிஸ் கோஷ்டி ஒன்று விரைந்தது. (ஒ-எ)

## குருநகர் சுற்றிவளைப்பு

நேற்று குருநகரின் ஒரு பகுதி நூற்றுக்கணக்கான இந்திய அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

வீடுகளிலும், வீதிகளிலும் காணப்பட்ட இளவயதினர் குருநகர் சென் ஜேம்ஸ் விளையாட்டரங்கிற்கும், தொடர்மாடிப் பகுதிக்குமாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

சிலர் மேல் விசாரணைக்காக அழைத்துச்செல்லப் பட்டனர். (ஒ-51)

முச்சந்தி முரளி



கடற்படைக் காரர் கெட்டித்தனம் காட்டுகினமாம். அப்ப பழைய படி வேதாளம் முருங்கை மரத்திலை ஏறின கதை தான் தொடரும் போலை...!

## ஜி. சி. ஈ. பரீட்சையை ஏப்ரலில் நடத்துக

### பலாலியில் நேற்று நடந்த மாநாட்டில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 4

டிசம்பரில் ஒத்தி வைக்கப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சையை ஏப்ரலில் நடத்த ஆவன செய்ய வேண்டும்.

நேற்றுக் காலை பலாலியில் நடைபெற்ற யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களினதும் அதிகாரிகள் மாநாட்டில் இப்படி வலியுறுத்தப்பட்டது.

மாநாட்டில் இந்திய அமைதிப் படையின் உயர் அதிகாரி ஒருவரும் கலந்து கொண்டார்.

இந்த வேண்டுகோளுக்குப் பதிலளித்த அந்த அதிகாரி கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புச் சபை மாநாட்டில் தாம் இது பற்றி ஜனாதிபதிக்குத் தெரிவித்ததாகவும், அடுத்த வாரம் மீண்டும் நடைபெற உள்ள பாதுகாப்புச் சபை மாநாட்டிலும் இது பற்றி பிரஸ்தாபிக்க உள்ளதாகவும் உறுதியளித்தார். (இ-9)

மீண்டும் பழைய பல்லவி:

## இரவில் மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை தாக்குதல்

குருநகர், மார்ச் 4

இரவு நேரத்தில் தொழிலுக்குச் செல்லும் குருநகர் மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப்படுகிறார்கள்.

இரவுநேர மீன்பிடிக்கு அனுமதிக்கப்பட்ட நாட்களில் இருந்து ஒவ்வொரு நாளும் தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம், குருநகர் அமைதிப்படை ராணுவ அதிகாரி கப்டன் வர்ணனின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்துள்ளது.

இதுவரை இருபதிற்கும் அதிகமான இயந்திரப் படகுகளில் சென்ற மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் செல்லத் தடை வரலாம்!

கொழும்பு, மார்ச் 4

மோட்டார் சைக்கிளில் மேலதிகமாக ஓர் ஆணை ஏற்றிச் செல்வதை தடுப்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி போக்குவரத்து அமைச்சரை, அமைச்சரவை கேட்டுள்ளது

மேலதிகமாக ஆண்களை ஏற்றிச் செல்லாமல், பெண்களையும், குழந்தைகளையும் மட்டும் ஏற்றிச் செல்ல அனுமதிப்பது பற்றியும் அமைச்சர் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பார்

பெண்களும் குழந்தைகளும் மிகுந்த பாதுகாப்பாகச் செல்லக் கூடிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மட்டுநகரில் பேரணி

மட்டக்களப்பு, மார்ச் 4

மட்டக்களப்பில் மாபெரும் பேரணி ஒன்றை இன்று வெள்ளிக்கிழமை நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஈரோஸ் இயக்கம் செய்துள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்த மீறல்களையும், இலங்கை அரசின் இனவாதப் போக்கையும் ஆட்சேபிக்கும் வகையிலேயே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கல்வி

88 O/L) சித்திரை மீட்டல் வகுப்பு ஆரம்பம் 05-03-88 காலை 9 மணி சபியன் கல்வி நிலையம், கோண்டாவில்

### கம்பியூட்டர் கல்வி

பல்கலைக்கழக அனுமதி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆரம்பம்: 7-03-88 Unikco Computer Centre, No. 5, மின்சார நிலைய வீதி, 2ஆவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (உப தபாற் கந்தோர் அருகாமை)

### போட்டோஸ்ரட்

உங்கள் திருப்தியே எமது சேவை. எல்லா அளவுகளிலான நேர்த்தியான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும் சகல வகையான ரோனியோ வேலைகளுக்கும் உங்களுக்குத் தேவையான தமிழ் ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும் என்றும் எப்பொழுதும் கிளின், 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### TYPE WRITERS

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, Power House Road, 3rd Lane, Jaffna (1803)

### வகுப்புகள்

108 Brown Road, Jaffna, A/L 88 இரசாயனம் வினாவிடை வகுப்பு ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் 5-3-88 சனி 6 30 a.m (சனி, ஞாயிறு 6 30 a.m) பிரிவு II ஆரம்பம்: 6-3-88 ஞாயிறு 11.00 a.m

108 Brown Road, Jaffna A/L 88 இரசாயனம் வினாவிடை வகுப்பு ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 5-3-88 சனி 5:30 p.m (சனி, ஞாயிறு 5 30 p m)

### காணவில்லை

686361101 V அடையாள அட்டை பலாலி வீதியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தில் ஒப்படைக்கவும்.

செல்வன் S. உதயகுமாராகிய எனது அடையாள அட்டை (இல. 671711157V) பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மின்சார நிலையவீதி, 2ஆம் ஒழுங்கையில் உள்ள உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி பணிவன்புடன் வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [1811]

### புத்தகங்கள்

English Language easy Exercises and New Model Question Paper for G C E (O/L) Examination paper I & II (will solution) Bast on the Past Examination Paper. By Jasephine G Varnam price: 15/- available at Poobalasingham Book Depot Jafna. (1602)

### விற்பனைக்கு

சகல இன ரெலிவிசன் கலர் 20'' Tube, 12'' 20'' B/W Tube, Fly Back, ரியூனர், வீடியோ டெக்செட், மோட்டர் R. F. Converter மற்றும் உதிரிப்பாகங்கள் உடன் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். (1810)

### பெயர் மாற்றம்

திரு திருமதி குலசேகரம் அவர்களின் புத்திரன் நதீஷன் என்பவருடைய பெயர் 01-03-1988 முதல் C. நதீஷ் என மாற்றப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் இத்தால் அறியத் தருகின்றோம். (1801)

எம்மிடம் நல்ல இன சேவற் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் எந்நேரமும் விநியோகிக்கப்படும். புறொயிலர் குஞ்சுகள் 4, 5ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். New No. 127, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (1798)

### தையல் வேலை வாய்ப்பு

தையல் வேலையில் குறிப்பாக 'பிறேசியர்' தைப்பதில் நன்கு அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரிக்கு நற்சாட்சிப்பத்திரத்துடன் வரவும். ஒரு டசின் தைப்பதற்கு சகல கொடுப்பனவுகள் உட்பட ரூபா 30/- மட்டும் ஊதியமாகத் தரப்படும். முகமையாளர், பிறீமல்ரி சேவீஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு [திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்திற்கும் இடையில்] (1797)

Urlans Farm Ltd. Kandy கோழிக் குஞ்சுகள் 16-03-88 புதன்கிழமை விநியோகிக்கப்படும். (Lohmann) பிறவுண் பேடு ரூ 12 50 (Lohmann) சேவல் ரூ 4 00 முன் கூட்டியே பதிவு செய்யவும் இல 9 சூராவத்தை றோட் (கந்தையா லேன்) சுன்னாகம். (ஸ்டேசனுக்கு அருகாமையில்)

### தேவை

மாங்குளத்தில் தென் இந்திய திருச்சபையால் நடாத்தப்படும் தொழிற் கல்வி நிலையத்திற்கு தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து படிப்பிப்பதற்கும் மற்றும் தையல் பழக்குவதற்கும் ஆசிரியர்கள் தேவை இப்பதவிகளுக்குத் தகுதியுடையோர் கீழ்க்காணும் முகவரிக்கு இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் கொடுக்கப்படும்.

அருட் திரு டீ எஸ். தியாகராஜா, தென். இந்திய திருச்சபை. மாங்குளம். (1795)

## காணவில்லை



நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், லோட்டன் வீதி மானிப்பாயில் வசிப்பவருமான இ முருகுப்பிள்ளை நடராசா (வயது 80) என்பவரை 29-10-1987 தொடக்கம் காணவில்லை. புன்னாலைக்கட்டுவனிலிருந்து காணாமல் போன இவரைப் பற்றிய தகவல் எதுவும் அறியப்படவில்லை. இவர் தனது அடையாள அட்டையை எடுத்துச் செல்லவில்லை. நீல நிற சேட்டும் வெள்ளை வேட்டியும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் உடனடியாகக் கீழ்க் காண்ட விலாசத்துக்கு அறியத் தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

திருமதி சி நடராசா மனைவி, பிள்ளைகள்.
லோட்டன் வீதி,
மானிப்பாய். (1800)

## நன்றி நவிலல்

ஆசார அனுஷ்டானங்களுடன் கூடிய ஆதிசைவ மரபில் தோன்றி, இரண்டு தலைமுறைகள் வரிசையில், பைந்தமிழ் அன்னைக்கு செந்தமிழ் நடை எழுதி சைவமும் தமிழும் வளர்த்த — வளர்க்கும் யாழ் / வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள சமயகுரவர் ஆலய பூசகராகவும் நியமனமற்ற காவலராகவும், தன்னலமின்றி அரும்பணியாற்றி அசாதாரண சூழ்நிலையில் 12-11-1987இல் சிவபதமடைந்த திருவாளர் அ. சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தியடையுமுகமாக இரங்கற் தீர்மானத்தை நிறைவேற்றியும், ''நாவலர் பாடசாலையின் இழப்பு'' என்னும் தலைப்பில் ''ஈழநாடு'' பத்திரிகையில் பிரசுரித்து அன்னாரைக் கௌரவித்து, அநுதாபமும் ஆதரவும் வழங்கிய 'நாவலர் கர்த்தா சபையினர் அனைவருக்கும், அன்னாரின் மறைவையொட்டி அனுதாபம் தெரிவித்த மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அயலவர்கள், நண்பர்கள், அன்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இவ்வண்ணம்
அன்பு நெஞ்சன்
சி. சௌந்தரம் சர்வேஸ்
(ஏகபுதல்வன்)

''அன்னைபூமி''
வண்ணாந்துறை,
பருத்தித்துறை (1610)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17-02-1971



மறைவு: 14-02-1987

திதி: 04-03-1988 அமரபக்க பிரதமை

அமரர்
**பத்மஇராஜன் திவ்வியசொரூபினி (செல்லம்)**

எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உமது நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது.

14-02-1987 இல் கைதடியில் அகால மரணமெய்திய எமது அன்புச் செல்வம் செல்வி திவ்வியசொரூபினியின் முதலாவது சிராத்த தினமும், மகேஸ்வர பூசையும் (04-03-1988) இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அக்கருணம் குடும்பமாய் வந்து அவரது ஆத்மா சாந்தியடையும் வண்ணம் பிரார்த்தித்து மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
அன்னாரின் பிரிவால் துயருறும்
திரு. திருமதி பத்மஇராஜன்
திரு. திருமதி பத்மநாதன்
(பேரன், பேத்தி)
திரு. ப பாலச்சந்திரன் (சிறியதகப்பன்)
(சொரூபினி ரேடர்ஸ், கைதடி)

மாணர் வளவு,
கைதடி தெற்கு, கைதடி. (1799)

## கேள்விப்பத்திரங்கள் 1988

எமது விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டிற்குரிய ஆஸ்பத்திரிகளுக்கும், நிறுவனங்களுக்கும் பாண், விறகு போன்ற பொருள்கள் விநியோகம் செய்வதற்கும், வாகன சேவைக்கும் கேள்விகள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் எமது பணிமனையில் நேரடியாகவோ, தபால் உறையினை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்

இவ்விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எமது பணிமனைக் கேள்விப்பத்திரப் பெட்டியில் இட்டோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 17-3-88 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சு. சண்முகரத்தினம்
பிராந்தியக் கணக்காளர்,
வடபிராந்தியம்

விற்பனைத் திணைக்களம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
2-3-1988.

## கொழும்பு-யாழ்-கொழும்பு விமான சேவை

ஆரம்பம்: 12th March 1988
வாரம் 2 நாட்கள்

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**V. M. S.**
**Travels & Tours (Pvt) Ltd**
M 4, Hotel Galadari Meridien
64, Lotus Road, Colombo - 1
T. Phone 544344, 26157
Hotel Gnanams
299, Clock tower Road, Jaffna.

மற்றும் பாஸ்போட், விசா, ரிக்கட் எம்மால் துரித கதியில் செய்து கொடுக்கப்படும். (1606)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

### கல்விப் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி (பகுதிநேரம்) (முழுநேரம்) 1987/88

1987/88 கல்விப் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறி (பகுதிநேரம் / முழுநேரம்) பயிலுவதற்கான தேர்விற் சித்தி எய்தியவர்களுக்கு நேர்முகப் பரீட்சை 1988 மார்ச் 15 ஆம் நாள் (15/3/88) செவ்வாய்க்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் பல்கலைக்கழகச் செனற் அறையில் நடைபெறும்.

இத்தேர்வு பற்றிய கடிதங்கள் ஏற்கனவே உரிய முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன அழைக்கப்பட்டோர் பட்டியல் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு வரும்பொழுது கல்வித் தகைமைச் சான்றிதழ், சேவைக்காலச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டு வரவும்

பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.
29. 02. 88.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## THE DATACENTER

Centre for computer studies

Courses Conducte in:

* COMPUTER PROGRAMMING [Basic & Cobol] ஆரம்பம்: 5-3-88
* WORD PROCESSING [Using Wordstar]
* IDPM ஆரம்பம்: 16-3-88

மேலதிக விவரங்களுக்கு:
The DATACENTER,
77 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

511892961X என்னும் இலக்கமுடைய அடையாள அட்டையை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த A. ஸ்ரீபன் தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தோர் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தில் ஒப்படைக்கவும். (1618)

## தேவை
## அரிய சந்தர்ப்பம்

அகில இலங்கை
பரஸ்பர சகாய நிதிச் சங்க லிமிட்டெட்,
வட்டுக்கோட்டை.

மேற்படி ஸ்தாபனத்தில் பயிற்சியாளராக (வங்கிச்சேவை, கணக்கியல், கிராம அபிவிருத்தி தொடர்பான வேலைகள்) பழக்குவதற்கு ஆண் - பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.

1. வயதெல்லை:- 21க்கு மேல்
2. கல்வித்தகைமை:- கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திரம் G C. E (O/L) ஆனால் சிரேஷ்ட பொதுத் தராதரப் பத்திரமுடையோர் விரும்பத்தக்கது
3. பயிற்சிக்காலம்:- 6 மாதங்கள்
4. வதிவிடம்:- காரியாலயத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தெரிவு செய்யப்படுபவர்கள் பயிற்சிக் காலம் முடிவடைந்தபின் சங்கத்தின் சேவையில் அமர்த்தப்படுவார்கள்.

11. 12. 13, 3 88 திகதிகளில் சான்றிதழ்களுடன் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

தபாற் கந்தோரடி, வட்டுக்கோட்டை.
வே. இ. புவனேஸ்வரன் தலைவர்
(1791)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



திரு. இ. சிங்கரத்தினம்.
[லிகிதர் கொக்குவில் இந்துக் கல்லூரி]

மலர்வு 2 . 1. 1932 உதிர்வு 3 2 1988

எங்கள் அன்புத் தெய்வமே, நற்புத்திமதி கூறும் தலைவனாய் விளங்கினீர்களே! சடுதியில் மறைந்துவிட்டீர்கள். நீங்கள் எங்கள் உள்ளங்களில் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் தோன்றுகிறீர்கள். ஆனால் உங்கள் அன்புக் குரலைக் கேட்க முடியவில்லையே அப்பா!

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார்

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

நாவை அடக்கும் சக்தி ஒருவனுக்கு இல்லாது போயின், அவன் தனது மன நன்மையை இழக்கின்றான்.

— அன்னை சாரதாதேவி

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:—292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
04.3.1988 த.பெ.இல:—23

# அவசரம் வேண்டாமே!

மேற்கு நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதா? இல்லையா?

இந்த விடயத்தில் முடிவுக்கு வரும் பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணைக்குழுவையே சார்ந்தது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் டாக்டர் மரியோ லாந்தர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதின் பின்னர், இந்திய அரசு, தனது நாட்டில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பி வருகிறது.

அதன் விளைவாக, இலங்கைத் தமிழ் அகதிகள் தஞ்சம் புகுந்துள்ள மேற்கு நாடுகளும் அங்கிருந்து அவர்களைத் திருப்பி அனுப்ப முனைவது — நினைப்பது — இயல்பு.

தாம் தஞ்சம் அளித்த மக்களைத் திருப்பி அனுப்புவதா இல்லையா என்பதை அந்தந்த நாட்டு அரசாங்கங்களே முடிவு செய்யும்.

எனினும் டாக்டர் மரியோ லாந்தர் கூறுவதில் இருந்து, சம்பந்தப்பட்ட மேற்கு நாட்டு அரசுகள், ஐ நா அகதிகள் ஆணைக்குழுவின் சிபார்சுடன், அல்லது அனுசரணையுடனேயே தங்கள் முடிவுகளை மேற்கொள்ளும் என ஊகிக்க முடிகிறது.

மேற்கு நாடுகளில் நூற்றுக்கு 99 சதவிதமானவை ஐ. நா. வின் உறுப்பு நாடுகளாக இருப்பதால், அவை ஐ நா. ஆணைக்குழுவின் சிபார்சைப் புறக்கணித்துச் செயற்படமாட்டா என்றே நம்பலாம்

இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்தில், ஐ நா அகதிகள் ஆணைக்குழு எப்போதும் புரிந்துணர்வுடனும், நியாயத்தின் பக்கமும் நிற்பதை அவதானிக்க முடிந்தது.

இலங்கை அரசு, தமிழ் அகதிகள் குறித்து மாறுபட்ட தகவல்களையும், ஒரு பக்கச் சார்பான பிரசாரங்களையும் நடத்திய போதெல்லாம் —

ஐ.நா. அகதிகள் ஆணைக்குழு, தனது சொந்தத்தில் மேற்கொண்ட ஆய்வுகள், புள்ளி விவரங்கள், தரவுகளை வைத்துக் கொண்டு —

நியாயத்துக்காகப் பாடுபட்டது. அதற்காகக் குரல் கொடுக்கவும் செய்தது.

அதே போக்கையும் செயற்பாட்டையும் இப்போதும் அது மேற்கொள்ள வேண்டும்.

ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருப்பதால், இந்தியா தன்னிடமிருந்த அகதிகளை அனுப்பவே செய்யும். அதனை முன்னுதாரணமாக வைத்து ஏனைய நாடுகளும், குறிப்பாக மேற்கு நாடுகளும் செயற்பட வேண்டும் என்பதல்ல.

எனவே ஐ. நா ஆணைக்குழு இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் எழுந்தமானத்தில், அவசரத்தில் எந்த முடிவையும் மேற்கொள்ளல் ஆகாது

பிரஸ்தாப ஆணைக்குழு, இலங்கைத் தமிழ் மக்கள் சகஜ வாழ்க்கை நிலைக்குத் திரும்பக் கூடிய, அச்சமற்ற சமாதான, அமைதிச் சூழ்நிலை இங்கு உருவாகிவிட்டதா என்பதை தனது சொந்தத்தில், நேரில் கண்டறிந்து ஆறுதலாக ஆய்ந்துணர்ந்து, நியாயமான நல்ல முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கின்றோம். அவ்வாறே செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

---

அப்கன் பிரச்சினையில்

# இந்தியாவும் அக்கறைப்பட நியாயம் இருக்கின்றது

## பிரதமர் காந்தி கூறுகின்றார்

புதுடில்லி, மார்ச் 3

ஆப்கன் பிரச்சினையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து இந்தியாவுக்கும் அக்கறை உண்டு.

பிரதமர் ராஜீவ்காந்தி நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் பேசியபோது இப்படிச் சொன்னார்.

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை விவாதத்தை முடித்துவைத்து 70 நிமிடங்கள் வரையில் பிரதமர் பேசினார்.

ஆப்கன் பிரச்சினை இரண்டு வல்லரசுகளின் போராக மாறும் அபாயத்தை அடைந்தது. எமது கதவுக்கு வல்லரசுகள் வரக்கூடிய நிலைமையை ஆப்கன் பிரச்சினை ஏற்படுத்திவிட்டது

இதுகுறித்து பாகிஸ்தானுடன் இந்தியாவும் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது

இப்படி பிரதமர் சொன்னார்

பிரதமர் பேசும்போது அரசு எம்.பி.கள் ஆரவாரஞ் செய்து பிரதமரின் பேச்சை வரவேற்றனர் எதிர்த்தரப்புஎம் பிக்கள் அடிக்கடி குறுக்கீடு செய்தனர்.

ஒருகட்டத்தில் எதிர்க் கட்சி எம். பி. ஒருவர் ஊழல் நிறைந்த அரசு என்றார்.

பிரதமர் அதற்குப் பதிலளித்தார்:

''நாட்டின் மிகப்பெரிய ஊழல், திரு. ஜெயில் சிங்கை இரண்டாவது தடவை ஜனாதிபதியாக்க 30 முதல் 40 கோடி ரூபா வரை செலவழிக்க எதிர்க் கட்சிகள் முன் வந்தமை தான்''— என்று பிரதமர் தெரிவித்தார் (எ)

---

ஈரான் - ஈராக்

## ஏவுகணை யுத்தம் தொடருகின்றது

டெஹ்ரான், மார்ச் 3

ஈரானின் புனித நகரான குவாமும் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கானது.

ஈராக்குக்கும் ஈரானுக்கும் இடையே ஏவுகணைத் தாக்குதல் யுத்தம் மிகத் தீவிரமடைந்திருக்கின்றது.

சோவியத் தயாரிப்பான ஏவுகணையை நீண்ட தூரம் பாயக்கூடியதாக ஈராக் மாற்றி அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புனித நகரான குவாம், டெஹ்ரானிலிருந்து 75 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது (எ)

## இந்தியர்களைக் காப்பாற்றபிஜி இராணுவம்

பிஜியில் உள்ள இந்தியக் குடியிருப்புப் பகுதிகளை பிஜி இராணுவத்தினர் பாதுகாத்து வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை பிஜி இனத்தவரின் குழு ஒன்று இந்தியக் குடியிருப்பாளர் பகுதிக்குள் புகுந்து வீடுகளை எரித்துக் கலவரம் செய்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது (எ)

---

வெளி உலகில்

ஜப்பான்

## இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் வெற்றி!

டோக்கியோ, மார்ச்3

ஜப்பானில் நடைபெற்ற முக்கிய நாடாளுமன்ற இடைத் தேர்தல் ஒன்றில் ஆளும் கட்சி வேட்பாளரை, கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் தோற்கடித்தார்.

லிபரல் ஜனநாயகக் கட்சிக்குக் கிடைத்த இத் தோல்வி, பிரதமர் ரகேஷித்தாவின் புதிய வரித் திட்டம் ஒன்றைக் கொண்டு வர எடுத்து வரும் முயற்சியைத் தடுக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## போலந்து - வத்திக்கான் இராஜதந்திர உறவு

வஸ்ஸோ, மார்ச்3

போலந்து, வத்திக்கானுடன் ராஜதந்திர உறவுகளை வைத்துக் கொள்ள இருந்த தடையை ரோமன் கத்தோலிக்கத் தலைவர்கள் தளர்த்திவிட்டனர்என்று அறிவிக்கப்படுகின்றது.

போலந்து ரோமன் கத்தோலிக்க தேவாலயத்துக்கு. கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்ததில் இருந்து தடைவிதிக்கப்பட்டிருந்தது

1944 இல் இருந்து அமுலில் இருக்கும் இந்தத் தடையை நீக்கவேண்டும் என்று போலந்து தேவாலயத் தலைவர்கள் இதுகாலவரை வற்புறுத்தி வந்தனர்.

இப்போது அக்கோரிக்கையைக் கைவிட அவர்கள் முடிவு செய்து விட்டனராம்.

பரிசுத்த பாப்பாண்டவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

---

சபாநாயகர்

## பாண்டியன் மீதுவழக்கு விசாரணை!

தமிழக சபாநாயகர் பி. எச் பாண்டியனை ''அந்த பதவியிலிருந்து நீக்க வேண்டும்'' என்று கோரி சென்னை ஹைகோட்டில் வக்கீல்கள் ஜெயநாதன், குணராஜ். டாக்டர் பாலசுப்பிரமணியம் ஆகிய 3 பேரும் மூன்று வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர் அல்லவா?

இந்த வழக்குகள் ஹைகோர்ட்டு நீதிபதி எஸ். மோகன் முன்னிலையில் டிரிசிலனைக்கு வந்தது. வழக்கு மீதான விசாரணையை வேறு நீதிபதி முன்னிலையில் மாற்ற வேண்டும் என்று மனுதாரர் சார்பில் கோரப்பட்டது இதை நீதிபதி ஏற்று கொண்டு வழக்கு மீதான விசாரணையை வேறு நீதிபதி முன்னிலையில் மாற்ற வேண்டும் என்று கேட்டு தலைமை நீதிபதிக்கு அனுப்பி வைத்தார்.

---

ஷெயில்சிங் தெரிவுக்கு

# கோடிக் கணக்கில் எதிர்க்கட்சிகள் செலவழிக்க

## முன்வந்தது பற்றி விசாரணை

புதுடில்லி, மார்ச் 3

திரு ஷெயில் சிங்கை இரண்டாவது தடவை ஜனாதிபதியாக்கும் முயற்சிக்கு முப்பது முதல் நாற்பது கோடி ரூபா வரை எதிர்க்கட்சிகள் செலவழிக்க முன்வந்தன என்று கூறப்படுவது பற்றி பூரண விசாரணை நடத்தும்படி உள்துறை அமைச்சர் பூட்டாசிங்குக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்தகவலைப் பிரதமர் ராஜீவ் காந்தி லோக் சபாவில் பேசுகையில் வெளியிட்டார்

முன்னாள் ஜனாதிபதி ஷெயில்சிங் 'கல்கத்தா சண்டே' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், முப்பது முதல் நாற்பது கோடி ரூபா செலவழித்து தன்னை இரண்டாவது முறை ஜனாதிபதியாக்க எதிர்க்கட்சிகள் முன்வந்தன என்றுதெரிவித்திருந்தார்.

அதுகுறித்தே பிரதமர் லோக சபாவில் பேசினார் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்காததற்காக திரு ஷெயில் சிங்கை பிரதமர் பாராட்டினார்.

''ஜனாதிபதித் தேர்தலுக்குப்பிரசாரம் நடத்த முடியாது அப்படி இருக்கையில் எப்படி எதிர்க்கட்சிகள் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்க திட்டமிட்டிருந்தது? இதுகுறித் விசாரணை நடக்கவேண்டியதவசியமாகின்றது நாட்டின் பாதுகாப்பும் இதில் சம்பந்தப்பட்டுள்ளது'' என பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்தார் [எ]

## விமான விபத்து பதினேழுபேர்பலி!

பயணிகள் விமானம் ஒன்று நடுவானில் வெடித்து நொருங்கியதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

தென் ஆபிரிக்கத் தலைநகரான ஜோஹன்னர்ஸ்பர்க் அருகில் இச் சம்பவம் இடம்பெற்றது.

திடீரென்று வெடித்ததில் விமானம் நடுவானில் இரண்டாகப் பிளந்து நொருங்கியது. (எ)

## செல்வாக்குத் தலைவர் மு. க.

சென்னை, மார்ச் 4

தமிழகத்தில் அதிக செல்வாக்குப் பெற்ற ஒரேயொரு அரசியல்வாதி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியே

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் உள்ள புள்ளி விவரக் குழு நடத்திய ஆய்வில் இது தெரிய வந்திருக்கின்றது

திரு. கருணாநிதிக்கு உள்ள செல்வாக்கு தமிழ் நாட்டில் உள்ள ஏனைய அரசியல் வாதிகள் எவருக்கும் இல்லை என்றும் அந்த ஆய்வு தெரிவித்தது.

(அ-எ)

---

## பரீட்சைக்கான ஒழுங்கு மேற்கொள்ளப்பட வேண்டும்

### கைஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.4

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறவேண்டிய ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறவில்லை இதனால் சுமார் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது

இங்கு நிலவிய சூழ்நிலையின் காரணமாகப் பரீட்சைகளைப் பின்போடுவதாக அரசாங்கம் அறிவித்தது மேலும் பரீட்சைகளை மார்ச், அல்லது ஏப்ரல் அளவில் நடத்துவதாக இருந்தது. ஆனால் இன்று அதற்கான ஒழுங்குகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை உடனடியாக இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

கைஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தரப்படுத்தலால் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டபோது அவர்களின் உளரீதியில் ஏற்பட்ட மாறுதல்களையும் அதன் விளைவுகளையும் சமுதாயம் கண்டுள்ளது.

சமுதாய நெருக்கடிகளினால் கல்வி ஒன்றை மட்டுமே மூலதனமாக நம்பி வாழும் இந்த மாணவர்கள் மத்தியில் மனவிரக்தியும் எதிர்காலத்தைப் பற்றிய அச்சமும் தலை தூக்கியுள்ளன.

சமுதாயத்தின் அடுத்த தலைமுறையைப் பொறுப்பெடுத்து நடத்தப் போகும் இந்த இளம் சிறுர்கள் மத்தியில் இப்படியான நிலைமைகள் தொடர்ந்து நீடிப்பதென்பது அனுமதிக்க முடியாதது.

இப்படியும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

## நீதியரசர் இருவர் நியமனம்

கொழும்பு, மார்ச் 4

உயர் நீதிமன்ற நீதியரசர்களாக இருவர்புதிதாகநியமிக்கப்பட்டனர்

ஒருவர் திரு. திஸ்ஸ பண்டாரநாயக்க. இவர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவராக பணியாற்றி வந்தார்.

மற்றவர் ஜனாப் எம். ஜமீல் இவர் மேன்முறையீட்டு நீதியரசராகப் பதவி வகித்து வந்தார். (ஓ எ)

---

காத்தான்குடியில்

## முஸ்லிம்களுக்கு ரூ.10 கோடி இழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 4

காத்தான்குடியில் அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உடைமைகள் இழப்பின் பெறுமதி சுமார் 10 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

இந்த இழப்புகளினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள், குடியிருப்பாளர்களுக்கு நஷ்டஈடு, நிவாரணம் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் பள்ளிவாசல் சம்மேளனம் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

இந்த வன்செயல்களால் 30 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன 35 பேர் தொடர்பான தகவல்கள் இல்லை. அவர்களும் கொல்லப்பட்டிருக்கலாமென தாம் கருதுவதாக சம்மேளன உறுப்பினரொருவர் தெரிவித்தார். (இ-21)

## விசர்நாய் கட்டுப்பாடு: புதிதாகச் சட்டமூலம்

### 30 ஆண்டுகளில் 5 ஆயிரம் பேர் மரணம்

கொழும்பு, மார்ச் 4

விசர்நாய்க் கட்டுப்பாட்டுச் சட்டமூலம் ஒன்றைப் புதிதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

1895, 1905 ஆம் ஆண்டுகளில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட இரண்டு சட்டங்களுக்குப் பதிலாகப் புதிய சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது.

புதிய சட்டமூலத்தின் படி நாய் வளர்ப்பவர்கள் தங்கள் நாய்களை உள்ளூராட்சி மன்றங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாய்க்கும் 20 ரூபா பதிவுக் கட்டணமாக அறவிடப்படும்.

கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையில் சுமார் 5 ஆயிரம் பேர் விசர் நாய்க்கடியில் உயிரிழந்திருக்கின்றனர். (இ-எ)

---

விளையாட்டரங்கு

## கிளிநொச்சியில் வலைபந்தாட்ட பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 4

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் வலைபந்தாட்ட பயிற்சி முகாமொன்று அண்மையில் கிளிநொச்சியில் நடத்தப்பட்டது.

மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியைகள், மாணவிகள், 6 விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் உட்பட சுமார் 75 வீராங்கனைகள் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட பயிற்றுனர் செல்வி எஸ் வைத்திலிங்கம், நல்லூர் விளையாட்டு அதிகாரி செல்வி யசோதா, சென். திரேசா மகாவித்தியாலய உடற்பயிற்சி ஆசிரியை திருமதி சூரியமூர்த்தி ஆகியோர் வீராங்கனைகளுக்குப் பயிற்சியளித்தனர்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு ஏ. எஸ். உணரெட்ணம் கிளிநொச்சி விளையாட்டு அதிகாரி. திரு. எஸ் கனகராஜா ஆகியோர் இந்த முகாமை முன்னின்று நடத்தினர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே முதன் முதல் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமிற்கு கிளிநொச்சி செயலக உதவி அரச அதிபர் திரு கே. துரைராஜா பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

உதைபந்தாட்டம்

## சென். ரேக் அணி 4 - 2 கோல்களால் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 4

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை, யாழ் சென் ரேக் விளையாட்டுக் கழக அணி 4 இற்கு 2 என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது.

சென் ரேக் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தசினேகபூர்வ ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்பாக இருந்தது

சென். ரேக் அணியின் சார்பில் ஜே ஏ அகஸ்ரின, கே. கொலின், சேரமான், நிகசன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோல் போட்டனர்.

சென். அன்ரனீஸ், அணி வீரர்கள் சேவியர் அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் ஒவ்வொரு கோல் போட்டனர்.

இந்தப் போட்டிக்கு திரு எம். தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார். (இ-7)

---

## ஆப்கன் பேச்சு; ஜெனிவாவில் ஆரம்பம்

ஆப்கன் பிரச்சினைக்கு ஜெனிவாப் பேச்சுக்கள் தீர்வு கண்டுவிடும் என்ற அளவுக்கு அதிகமான நம்பிக்கை வைக்க வேண்டாம் —

இப்படிபேச்சுக்களுக்கு மத்தியஸ்தராக இருக்கும் ஐ நா அதிகாரிதெரிவித்தார்.

பாகிஸ்தான் ஆப்கன் அரசுகளின் பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுக்கள் தொடங்கு முன்னர் ஐ நா பிரதிநிதி இப்படிச் சொன்னார்.

---



### பொய்யாமொழி

குறள்:

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

பொருள்:

நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும்; மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உதயன்

04 - 03 - 1988 வெள்ளிக்கிழமை







மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட

# பிரதி, மாவட்ட அமைச்சர்கள் நால்வர் ராஜினாமாச் செய்வர்

கொழும்பு, மார்ச் 4
இரண்டு மாவட்ட அமைச்சர்கள், இரண்டு பிரதி அமைச்சர்கள் அடுத்த சில தினங்களில் எம்.பி. பதவிகளை ராஜினாமாச் செய்வர்.

நான்கு மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட இவர்கள் பதவி விலகுகின்றனர் என்று கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி எம்.பி.யும் பிரதி அமைச்சருமான திரு ஜி வி. புஞ்சி நிலமே, வெலிமடை எம்.பி.யும் பிரதி அமைச்சருமான திரு. பேர்ஸி சமரவீர, கம்பஹா எம். பி. யும் மாவட்ட அமைச்சருமான திரு ஜெயவிக்கிரம பெரேரா, கெக்கிராவ எம் பி. யும் மாவட்ட அமைச்சருமான திரு. ஜி, டி மஹிந்தசோம ஆகியோரே ராஜினாமாச்செய்யவிருப்பவர்களாவர்.

திரு புஞ்சிநிலமே சப்ரகமுவா மாகாணத்திலும்,திரு ஜெயவிக்கிரம பெரேரா வடமேற்கு மாகாணத்திலும். திரு. மஹிந்தசோம வடமத்திய மாகாணத்திலும் ஐக்கிய தேசிய கட்சிக் குழுவுக்குத் தலைமை வகிப்பர். (ஓ-எ)

---

பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி லறிசா

நெடுந்தீவு மத்தியைச் சேர்ந்த ஒஸ்வேல்ட் விஜி தம்பதிகளின் செல்வப் புதல்வி லறிசா தனது முதலாவதுபிறந்த நாளை 4-3-88இன்று யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணன், தஸ்மன்ஐயா, பப்பா, அம்மம்மா, அப்பம்மா, ஆசைமாமா, ஆசைமாமி, சித்தப்பாமார், சித்தி. பூட்டன் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன்அருள் பெற்று பல்கலையும் பயின்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

(1608)

---

## தமிழ் தந்த தாதாக்கள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 4
தமிழறிஞர் திரு. க. சி குலரத்தினம் எழுதிய தமிழ் தந்த தாதாக்கள் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் ஞாயிறு மாலை இடம் பெறும்.

சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக அமைச்சர் தொண்டமான் கலந்து கொள்வார்.

பேராசிரியர் ஆ சதாசிவம், தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன், வீரகேசரி ஆசிரியர் எம் சிவனேயச்செல்வன் ஆகியோரும் பங்குபற்றுவர்.

---

## இரவில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ளது.

கடந்த புதன்கிழமை இரவு ஐந்து இயந்திரப் படகுகளில் சென்றவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் நையப் புடைத்ததுடன் அவர்களிடம் இருந்த இறால் மீன் வகைகளையும் பறித்துக் கொண்டு துரத்தியதாக நேற்றுக் கரை வந்த மீனவர்கள் கூறினர். (ஒ-51)

---

## இவை யாருடையவை?

யாழ்ப்பாணம், மார்ச் 4
புதனன்றுயாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்னால், வீதியில்அனாதாவாகக் கிடந்த ஆறு ஊழியர் சேமலாப நிதி கணக்குப் புத்தகங்கள் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளன

யாழ் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. ஆர். எஸ் சிவபாலன் என்பவர் மேற்படி ஊ சே. நி கணக்குப் புத்தகங்களைக் கண்டெடுத்தார்.

உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் அந்தக் கணக்குப் புத்தகங்களை உதயன் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

★

யாழ்ப்பாணம், மார்ச் 4
சனடா, பொன்ரீல் வங்கியின் நூறு டொலருக்கான காசோலை ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது.

சாவகச்சேரி, மருதடியைச் சேர்ந்த செல்வன் எஸ். சண்முகநாதன் என்பவர் எரிந்த கொடிகாமம் தபால் நிலையத்தில் இதனைக் கண்டெடுத்தார்.

உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் வந்து உதயன் பணிமனையில் காசோலையைப் பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

---

## காற்சட்டை அணிந்த பிக்குகள்!

கொழும்பு, மார்ச் 4
பிக்கு உடையைக் களைந்த பின்னர் காற்சட்டை அணிந்து கொண்டு சென்றனர் என்றுகூறப்படும் இரண்டு பேரைக் கண்டு பிடிப்பதில் வெள்ளவத்தைப் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை வெள்ளவத்தைக் கடற்கரையில் இரண்டு பௌத்த பிக்குகள் மஞ்சள் அங்கியைக் களைந்து விட்டு, காற்சட்டையை அணிந்ததைச் சிலர் கண்டனர் உடனே பொலிஸுக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் அந்த இடத்துக்குவிரைந்தனர். மஞ்சள் அங்கிகளைத் தான் பொலிஸாரினால் கடற்கரையில் கண்டு பிடிக்க முடிந்தது. அந்த நபர்கள் தப்பி விட்டனர். (ஓ-எ)

---

## மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர்

கொழும்பு, மார்ச் 4
மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நீதியரசர் திரு. ரஞ்சித் தீரரத்தின நியமிக்கப் பட்டார்.

---

சிங்கள இளைஞர்

## மூவர் சுட்டுக் கொலை

கொழும்பு, மார்ச் 4
அம்பாறை மாவட்டத்தில் இலங்கைப் பொலிஸார் மூன்று சிங்கள இளைஞர்களைச் சுட்டுக் கொன்றனர்.

இவர்கள் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கல்முனைக்குச் சென்று கொண்டிருந்த இலங்கைப் பொலிஸ் ரோந்துக் கோஷ்டியை, இந்த இளைஞர்கள் வழி மறித்துத் தாக்க முயற்சித்தனராம். அப்போதே பொலிஸார் திருப்பிச் சுட்டனர் என்று சொல்லப்படுகிறது

(அ)

---

## ஆண்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் மோட்டார் சைக்கிளுன் சிறிய கார் ஒன்றை இணைக்கக் கூடிய தான புதியமாடல்மோட்டார் சைக்கிளைத் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவது குறித்தும் பரிசீலனை செய்யுமாறும் அமைச்சரை,அமைச்சரவை கேட்டுள்ளது

(ஒ-எ)

---

## நெடுந்தீவிலும் திடீர் தேடுதல்

நெடுந்தீவு, மார்ச் 4
நெடுந்தீவில் திடீர் முற்றுகையிட்ட இந்திய அமைதிப் படையினர் அங்கு தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சுமார் முந்நூறுக்கும் அதிகமான படையினர் கிராமத்தினுள் நுழைந்த சமயம் ஏனையோர் கடற்படைக் கப்பலில் இருந்தபடி கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

நெடுந்தீவு தபாலகம், மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் நிலை கொண்ட படையினர் முகமூடியின் முன்னால் இளைஞர்களை நிறுத்தி நால்வரைக் கைது செய்தனர்.

அமைதிப்படையினரின் திடீர் சோதனையை அடுத்து சம்பவ தினம் நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச்சேவை இடம்பெறவில்லை.

## மனித எலும்புக்கூடு

கிளிநொச்சி, மார்ச் 4
இனம் காணமுடியாத நிலையில் மனித எலும்புக்கூடு ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன் தட்டுவன்கொட்டி விழா ஓடைக் குளத்தருகே கண்டெடுக்கப்பட்டது.

தட்டுவன் கொட்டி கிராமசேவகர் சி கருணானந்தத்துக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குளத்தருகே இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூட்டுக்குரியவர் யார் என்பது இது வரை தெரியவரவில்லை.

(இ-76)

---

## காணவில்லை



சுன்னாகம் தெற்கு மனநோயாளியான செல்வர் குகன் அல்லது தேவியன். அல்லது குகதாசன், கடந்த அக்டோபர் 13 ஆம் திகதி புதிய 'லுமாலா' சைக்கிளில் வீட்டில் இருந்து சென்றவர்

(26 வயது) கறுப்பு நிறம் 5' 4'' உயரம்

இடது முழங்காலிற்குக் கீழ் காயத்தழும்புகள் உள்ளன. தகவல் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும்.

முகவரி:
இ. சின்னத்துரை
[துர்க்கா என்ரபிறைஸ் சைக்கிள் கடை]
K. K. S. Road,
[இலங்கை வங்கி முன்பாக]
சுன்னாகம். (1621)

---

நீத்தார் பட்டியல்

## திருமதி நா. நாகரெத்தினம்

(மகாலெட்சுமி மரக்காலே)

திருமதி நாகரெத்தினம் 3-3-88 அதிகாலை காலமானார். இவர் காலஞ்சென்ற பிரபல மர வியாபாரி தம்பியையாவின் ஏக புதல்வியும், முன்னாள் யாழ் - பொது நூலகப் பொறுப்பாளர் நாகரெத்தினத்தின் அன்பு மனைவியும். ஓமான் திருமதி மீனலோசனி ராஜரெத்தினம், லண்டன் காலஞ் சென்ற இரசாயனப் பொறியியலாளர் ரகுநாதன், மற்றும் லண்டன் ரவி, ரமணன், ராதா, ரங்கன் ஆகியோரினதும் அவுஸ்திரேலியா நீலாவினதும் அன்புத் தாயாரும். யாழ்-பொலீஸ் அலுவலக எழுதுவினைஞர் சகாதேவனின் அருமைச் சகோதரியும், தம்பியையா விறகுகாலை உரிமையாளர் திருமதி மயூரபாலினி சகாதேவனின் அருமை மைத்துனியும், ராஜரெத்தினம் (வரி உத்தியோகத்தர் ஓமான்), நணிகாசலம் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா). லண்டன் வத்சலாதேவி மற்றும் சசிகலாதேவி, ஆனந்தி. தில்லைராஜ். தமயந்தி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லண்டன் ராதிகா, பிரவீன் மற்றும் நாராயணி ஆரணி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்; க. நாகரெத்தினம்
31, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(1622)

---

## சதாசிவம் கனகசபாபதி (இரத்தினம்)

அராலி மேற்கு சதாசிவம் கனகசபாபதி சிவபதமடைந்து விட்டார். அன்னார் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் பூரவாகினி, சதானந்தன், கௌரிமனோகரி, (யாழ் தொலைத் தொடர்பு திணைக்களம்) நாகநந்தினி, நாகநந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலனின் (லங்கா சீமெந்து காங்கேசன்துறை) மாமனுமாவார். ஈமக்கிரியைகள் (04 - 03 - 88) வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: இராசசுந்தரம் (இந்திரம்)


# A. A. T.
# (Sri Lanka)
## STAGE I
JUNE 1988 EXAM

INITIATED BY THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

G.C.E. (O.LEVEL) 6 passes with 3 credit. இருந்தால் நீங்களும் ஒரு Accounting Technician ஆகலாம். எதிர் காலத்தில் அரசாங்கம், கூட்டுத்தாபனம் தனியார் கம்பனிகளில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு

அரிய சந்தர்ப்பம் !

21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கல்வித் தகைமையில் விசேட சலுகை

ஆரம்பம்: 12-3-88

**WEEKEND CLASSES** - English Medium
**WEEKDAY CLASSES** - Tamil Medium

A.A.T. Stage III சித்திபெய்துட மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து CHARTERED ACCOUNTANT ஆக வர வாய்ப்புண்டு

June '88 Stage I பரீட்சையில் தோற்றுவதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் எம்மிடம் உண்டு Student Registration with the Institute will be handled by us free of Charge.

For further details and Career advise

# HARVARD INSTITUTE

(Successor of Cantabia Institute, Sister organisation of Oxonia Institute)

13. Rasavinthodam Lane,
(ஸ்ரான்லி றோட் முடிவுக்கருகாமையில்)
JAFFNA.



பரி. பேதுருஆலய வாலிபர் ஒன்றியம் நடாத்தும்

# விடிவை நோக்கி !!!

(நற்செய்தி நிகழ்ச்சி)



5 - 3 - 1988 சனிக்கிழமை
மாலை 3.00 - 5-00 வரை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

(நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோ. 14 6)

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்



எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

1. வெங்கடேஸ் ✶ பரா ✶ பூர்ணிமா
✶ காங்கேயன் காளை ✶
2 ரஞ்சன் ✶ ராஜசுலோசனு
✶ ராஜா மலையசிம்மன் ✶
3. முத்துராமன் ✶ லட்சுமி ★ விஜயகுமாரதுங்க
✶ நங்கூரம் ✶
4. T. M. சௌந்தரராஜன் ✶ M. R ராதா
✶ பட்டினத்தார் ✶
5. நடிகர் திலகம் சிவாஜியின்
★ நவரசத் துளிகள் ✶
6. S. V. சேகரின் — நாடகம்
✶ காட்டில மழை ✶

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 04 03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road Jaffna on Friday, 4th March 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org